OS.No. 370/2018

Date : 05.02.2026

Witness Name & Rank – பழனிசாமி – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. இந்த வழக்கை தாக்கல் செய்தது எனது மனைவி தான் என்றால் சரிதான். எனது மனைவி மறைவிற்கு பிறகு நானும் எனது வாரிசுகளும் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 4 வது அயிட்ட சொத்தான காலை எண். 323 ல் சொத்து பொறுத்து என்ன மூலபத்திரம் தாக்கல் செய்துளளேன் என்றால் அந்த சொத்து குறித்து எந்த மூலப்பத்திரமும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி சொத்து விவரம் எவ்வாறு எழுதப்பட்டது என்றால் பதிவு அலுவலகத்தில் நகல் போட்டு தாக்கல் செய்தேன். இந்தவழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனவே நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சொத்தில் உள்ள வில்லங்கங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 16 அருணாச்சலம் எனது மனைவிக்கு கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் பத்திர எண். 1943/1967, 1997/1967 மற்றும் 1998/1967 கண்டுள்ள சொத்துக்களை மட்டும் எழுதிக்கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.
2. வா.சா.ஆ 16 பெற்ற பிறகு தான் எனது மனைவி இந்த வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது மனைவி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வா.சா.ஆ– 17 சட்ட அறிவிப்பு வழங்கினார் என்றால் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை. நான் இந்த வழக்கில் தரப்பினராக இணைவதற்கு முன்பு எனதுமனைவி எடுத்த இந்த வழக்கு நடவடிக்கைகள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். இந்த வழக்கில் 12ம் பிரதிவாதியான தங்கவேல் அவர்களை ஆதியில் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமால் 2022 ல் தான் தரப்பினராக சேர்த்தேன் என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி தங்கவேலை பொறுத்து என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் அவருக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை. அதே போல் 12ம் பிரதிவாதி தங்கவேல் எந்த பத்திரத்தின் அடிப்படையில் சொத்து வாங்கினார் என்று எந்த குறிப்பும் எனது வழக்குரையில் இல்லை என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி காலை எண். 323 ல் அயிட்டம் எண். 4 ல் குறிப்பிட்டுள்ள சொத்தை தான் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் மேற்படி நிலத்தை 1998 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் 12ம் பிரதிவாதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.
3. 1998 பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு 4 வது அயிட்ட சொத்தை பொறுத்து 1998 காலத்திலேயே எனது மனைவியை தவிர்த்து பாகப்பிரிவினை எழுது மூலமாக ஏற்பட்டுவிட்டது எனவே மேற்படி வழக்கு 4 வதுஅயிட்ட சொத்தை பொறுத்து எனது

மனைவிக்கு எந்த பாக உரிமை மூலமும் இல்லை எனவே அந்த சொத்தை பொறுத்து எங்களது பரிகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனக்கு எனது மனைவிக்கும் எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 1970 ல் நடந்தது. எனக்கும் எனது மனைவிக்கும் வழக்கு தாக்கல் செய்த போதே 1998 பாகப்பிரிவினை பத்திரம் தொடர்பாகவும் அதன் அடிப்படையில் 12 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விவரமும் தெரியும் இருந்தும் எங்களுக்கு பாக உரிமை இல்லாத வழக்கு 4 வது அயிட்ட சொத்தை முன்னிறுத்தி காலதாமதாக 2022 12 ம் பிரதிவாதியை தரப்பினராக முன்னிறுத்தியுள்ளேன் எனவே 4 வது அயிட்ட சொத்தை பொறுத்தும் 12 ம் பிரதிவாதியை பொறுத்தும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ. 11 முதல் வா.சா.ஆ 15 வரையிலான ஆவணங்கள் வழக்கு காலகட்டத்தில் வாங்கப்பட்டவை என்றால் சரிதான். எனவே அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் அயிட்ட எண். 4 ல் உள்ள காலை எண். 323 சொத்து தொடர்பான குறிப்பை 1998 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் 12 ம் பிரதிவாதி பெற்ற கிரையப்பத்திரத்தையும் பார்த்து தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 12 ம் பிரதிவாதி தகுந்த மறுபயனின் பேரில் அயிட்ட எண். 4 ல் உள்ள காலை எண். 323 சொத்தை வாங்கியுள்ள நிலையில் அதில் எனது மனைவிக்கு எந்த உரிமையும் இல்லை எனவே அந்த சொத்து பொறுத்தும் 12 ம் பிரதிவாதியை பொறுத்தும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.